திரளட்டும் தலைவர் சேனைகள்! மிரளட்டும் மதவெறிக் கூட்டம்!

உலகில் உள்ள ஜனநாயக நாடுகளில் ஒன்றான இந்திய ஒன்றியத்தின் மிகப் பெரும் தேர்தல் நடந்தேறியது.

இந்தியா முழுவதும் எதிர்பார்க்கப்பட்ட ஆட்சி மாற்றம் நடைபெறாவிட்டாலும், ஜனநாயகம் தனது கால்களை ஆழ ஊன்றி நிற்பதை நாடே உணர்ந்திருக்கிறது.

பழைய மொந்தையில் பழைய கள்ளாக பாசிச பா.ஜ.க. ஆட்சி அமைத்தாலும், கடந்த தேர்தல்களில் பெற்றிருந்த தனித்துவத்தைப் பெறமுடியாமல் தவிக்கிறது.

எதிரணியான நமது இந்தியா கூட்டணி பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக தனது ஜனநாயகக் கடமைகளை நிலைநிறுத்த தயாராகவே இருக்கிறது.

தேர்தல் முடிவுகள் குறித்தும், மிக மிக சொற்ப வாக்கு வித்தியாசத்தில் இந்தியா கூட்டணி தவறவிட்ட வெற்றி வாய்ப்பினைக் குறித்தும் அரசியல் நெறியாளர்கள், ஊடகவியலாளர்கள், பத்திரிகைகள் பலவாறு படம் பிடித்துக் காட்டி வருகின்றனர்.

மக்கள் மன்றத்தையே சந்திக்காமல், மத்திய மந்திரிகளாகும் தந்திரம் மிகுந்த தர்பைக் கூட்டம் ஒருபுறம்.

மகுடத்தையே கழற்றி, தேர்தல் மந்தையில், சந்தையில் நின்று, மக்கள் ஏற்காமல் மண்ணைக் கவ்விய சூத்திர அடிமைகள் ஒரு புறம்.

எண்ணற்ற கொடுமைகளை எதிர்கொண்டும், தெளிவு பிறக்கவில்லை. சிந்தனையில் வலிவும் பிறக்கவில்லை, வடநாட்டின் பிற்படுத்தப்பட்ட வாக்காளர்களுக்கு,

அறியாமையில் மூழ்கி, ஆயாராம், காயாராம் போல் பாசிச பா.ஜ.க.வின் பசப்பு மொழிக்கு இணங்கி ஏமாந்தனர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1990 -ல் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்திய மனிதாபிமானி வி.பி.சிங் அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்கும் நிகழ்வில் கலைவாணர் அரங்கில் தனது தலைமைக் கவிதையில்,

“வாழைமரம் தன்னை வெட்டிக் கட்டியதையறியாமல், வருவோரை வரவேற்கும், மணவீட்டில்!

அதுபோல் வடக்கிலுள்ள பிற்பட்டோர் தங்கள் நிலையறியாது கிடக்கின்றார்!” என முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் குறிப்பிட்டார்.

அந்த நிலை இன்னும் மாறவில்லை.

அண்ணா அவர்கள் ஒருமுறை, “இந்தியாவின் வரலாறு கங்கையில் இருந்தல்ல காவிரியிலிருந்து எழுதப்பட வேண்டும்” என்றார்.

அந்த அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்ற கண்ணான தலைவர் கலைஞரின் கண்மணி தலைவர் தளபதியவர்களின் பொன்னான ஆட்சி, அரசியல் பரிபாலனம் அந்தப் பாதையில் தான் செல்கிறது.

‘நீட்’டிற்கு கேட்டும், நீசமொழி இந்தித் திணிப்பிற்கு பூட்டும், வேலாயுத, சூலாயுத சூழ்ச்சி பரிவாரங்களுக்கு வேட்டும், தனது தேர்ந்த அரசியல் மதிநுட்பத்தால் காட்டும் அவரது விழியசைவில் விணைமுடிக்க காத்துக்கொண்டிருக்கும் கழகக் காளையர் கூட்டம்.

அதனால் தான் நமது ஆருயிர் தலைவர் தளபதியர்கள் எங்கும் எதிலும் தனித்தன்மை மிக்கவராய் வலம் வருகிறார்.

“அவரது பேச்சோ, தங்கு தடையின்றி பாய்ந்தோடி வருகிறது. மலைகளை துளைத்துக் கொண்டும், கற்களை உருட்டிக் கொண்டும், காடுகழனிகளை வலம் பெற செய்துகொண்டும், நுரை நயத்துடன், ஒய்யார நடையுடன் அங்கே போகிறார். இங்கே வருகிறார்” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நமது பகுத்தறிவு பெருங்கிழவர் பெரியார் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுவார்கள். இந்த சொல்லோவியத்திற்கு சுத்தப் பொருத்தமாய் நமது தளபதியவர்கள் தொடர் வெற்றிகளின் உலைகளமாய்த் திகழ்கிறார்.

பரந்துபட்ட இந்தியாவில் பல மாநிலங்களில் பல்முனை போட்டிகள் நிலவிய சூழலில் மேலும் கீழுமாகவே வெற்றி தோல்விகளை பகிர்ந்து கொண்ட நிலையில் களம் கண்ட அனைத்து இடங்களிலும் வெற்றியை அறுவடை செய்த ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே!

அந்த வெற்றியை ஈட்டித் தந்த பெருமகன் நமது உயிரனைய தலைவர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் மகத்தான தலைவர் அவர்கள் என்பதில்தான் நமக்கு எவ்வளவு பெருமை! கௌரவம்! கர்வமும் கூட.

இந்தத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி தலைவர்கள் பெரிதும் நம்பியிருந்த நமது தலைவர் நூற்றுக்கு நூறு சதவீத வெற்றியை தேடித்தந்து கூட்டணி தலைவர்கள் நெஞ்சங்களில் விருப்பும், வியப்பும் ஏற்படும் வகையில் தனது நேர்த்தியான தேர்தல் பரப்புரை, நித்தம் மக்கள் நலன் பேணும் ஆட்சி தந்து வெற்றி வாகை சூடினார்.

கழகம் தேர்தல் களங்களில் பயணிக்க துவங்கிய 1957 முதல் ஆடு தாண்டும் காவேரியாக சட்டமன்றத்தில் 15 இடங்கள். 67 -ல் 138 இடங்கள். பின்னர் 1971 -ல் அகண்ட காவிரியாய் 184 இடங்கள். தேர்தல் சக்கர சுழற்சியில் 1977 -ல் 38 இடங்கள் பின்னர் வெற்றி தோல்வி என மாறிய நிலையில் உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் எத்தனை எத்தனை பரிமாற்றங்கள்?

அவரிடத்திலே பெற்ற பயிற்சி, இலக்கை சொல்லியடிக்கும் வித்தை இவற்றையெல்லாம் நீண்ட நெடுங்காலம் நின்று, நிதானித்து, கவனித்து, தலைவர் கலைஞரின் மறைவிற்குப் பின்னர் தி.மு.க. எனும் மாபெரும் ஜனநாயக இயக்கத்திற்கு தலைமை ஏற்று 2019 நாடாளுமன்றத் தேர்தலில் 40 க்கு 39 இடங்கள் (தி.மு.க. நின்ற அனைத்து இடங்களிலும் வென்று சாதனை). அதே ஆண்டில் உள்ளாட்சி தேர்தலில் மகத்தான வெற்றி. 2021 -ல் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி பொறுப்பு . அதே ஆண்டில் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சி, மாநகராட்சி தேர்தல்களில் இமாலய வெற்றி என வெற்றி மேல் வெற்றி வலம் வரும் தமிழினத்தளபதியவர்கள் அண்மையில் பெற்ற நாடாளுமன்ற அபார வெற்றி, அதற்கும் மேலாக ஐம்பெரும் முழக்கம் தந்து, அணுவளவும் நம் நெஞ்சைவிட்டு அகலாத அன்னைநிகர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா!

வழக்கறிஞர்
வெ.அன்புவாணன்
கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்

இவற்றை உற்சாக மிகுதியில் உடன்பிறப்புகள் ஒன்றிணைந்து ஊர்ப்போற்றக் கொண்டாடஜீன் 15 கோவைக்கு அழைக்கிறார்.

கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக கல்லறைக்கு போகும் வரை கர்ஜித்த, பகுத்தறிவு பகலவன், வெந்தாடி வேந்தர், ஐயா பெரியாரின் பிறப்பிடமாம் நமது அண்ணா, கலைஞரின் குருகுலமாம் ஈரோட்டை வரமாய் பெற்ற கோவைக்கு அழைக்கிறார்!

தமிழின விடியலுக்காய், விரல் எழுதி, கால் தேய நடந்து, குரல்தேயப் பேசிய கொள்கைக்குன்றம், கோபாலபுரம் வீற்றிருந்த கோமான் தலைவர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினைக் காண உரிமையுடன் அழைக்கிறார். கோவையம்பதிக்கு!

காவிக்கூட்டத்தை கதறவிட்ட ஆவிநிகர் தலைவர் அழைக்கிறார் கோவைக்கு!

ஆரியமாயையை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தும் வல்லமைமிக்க சூரியப்புதல்வர் அழைக்கிறார் கோவைக்கு!

நமது இதயவேந்தர் தலைவர் கலைஞர் தனது இளமையில் ஜீபிடரில் கதை, வசனம் எழுத புரட்சி நடிகர் எம்.ஜி.ஆரோடு ஒரே வீட்டில் தங்கி, அவரது மூச்சுக் காற்றும், பேச்சுக்காற்றும் நிறைந்திருந்த சிங்கா நல்லூரை உள்ளடக்கிய கொங்கு மண்டலத்தில், கோவையில், கொடிசியா மைதானத்தில் குடும்பமாய் கூடி, வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்திட நமது குலத்தலைவர் அழைக்கிறார்!

தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகள் கட்டாயம் புறப்படுவோம்!

தலைவர் தளபதியவர்களின் தம்பிகள் அவரது ஆணையை தட்டாமல் புறப்படுவோம்!

திராவிட இயக்கங்களின் நாளைய நம்பிக்கை, உதயநிதி அவர்களின் உற்ற தோழர்கள் உடனே புறப்படுவோம்!

ஆம்!

காத்திருப்பார் தலைவர் தளபதி!

கனிந்து, கனிந்து!

நம்மை நினைந்து, நினைந்து!

கவனமுடன் புறப்படுவோம்!

தமிழினத்தின் சேவைக்கும், தேவைக்கும் தன்னை அர்ப்பணித்த வெற்றித்திருமகன் கோவைக்கு அழைக்கிறார்!

ஆர்ப்பரிப்போம்! அலைகடலென கோவையில் சங்கமிப்போம்!

திரளட்டும் தலைவர் சேனைகள்!

மிரளட்டும் மதவெறிக் கூட்டம்!

வாழ்க தலைவர் கலைஞரின் பெரும்புகழ்!

வெல்க நமது வெற்றிச்சூரியன் தங்கத் தளபதியவர்கள்!!

கோவை கொடிசியா மைதானத்தில், தி.மு.க. சார்பில், வருகிற 15.6.2024 அன்று நடைபெற உள்ள முப்பெரும் விழா ஏற்பாடுகளை, தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தமிழ்நாடு வீட்டுவசதித்துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆகியோர் பார்வையிட்டனர். உடன் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தளபதி முருகேசன், ஈஸ்வரசாமி எம்.பி., தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், கோவை மாநகராட்சி மேயர் கல்பனா ஆனந்த், கழக மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர் lpf தமிழ்செல்வன், கோவை மாநகராட்சி கல்விக்குழு தலைவர் மாலதி, வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் அசோக் ஆறுக்குட்டி, பீளமேடு பகுதி1 செயலாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், சிங்காநல்லூர் பகுதி1 செயலாளர் எஸ்.எம்.சாமி, வழக்கறிஞர் சரவணன்,மனோஜ்முத்துசாமி, கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம்

மக்களுக்கு ரேசன் பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்கிறது!

தாடிக்கொம்பில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

சின்னாளபட்டி, ஜூன்14- முத்தமிழறிஞர் கலைஞர் கொண்டு வந்த நுகர் பொருள் வாணிப கழகம் மூலம் தமிழக மக்களுக்கு ரேசன் பொருட்கள் தங்கு தடையின்றி கிடைத்து வருகிறது என்றும், தனிமனிதனின் கோரிக்கையை நிறைவேற்றும் அரசாக திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான மக்களுக்கான ஆட்சி செயல்படுகிறது என்று தாடிக்கொம்பில் நடைபெற்ற நியாய விலைக்கடைகளுக்கு கருவிழி பதிவு செய்யும் கருவி வழங்கும் விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில் பொதுமக்களுக்கு ரேசன் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. விரல் ரேகை சரியாக பதிவு செய்ய முடியாத நபர்களுக்கு கருவிழி மூலம் பதிவு செய்து ரேசன் பொருட்கள் வழங்குவதற்கு தமிழக அரசு சிறப்பான நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி நியாய விலைக் கடைகளுக்கு கருவிழி பதிவு செய்யும் கருவி வழங்கும் விழா தாடிக்கொம்பில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி தலைமை தாங்கினார். வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல், தாடிக்கொம்பு பேரூராட்சி மன்றத்தலைவர் கவிதா சின்னத்தம்பி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடராஜன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், அகரம் பேரூராட்சி மன்றத் தலைவர் நந்தகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வழங்கல் அலுவலர் ஜெயசித்ரகலா வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் பொது மக்கள் மத்தியில் தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி பேசும்போது தமிழ்நாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் தான் இன்று ரேசன் கடைகளுக்கு பொருட்கள் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இதனால் தமிழகத்தில் பசி பட்டினி இல்லாத நிலைமையை உருவாக்கியவர் கலைஞர் என்றார். முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு தனி நபரின் கோரிக்கையையும் தேடிச் சென்று நிறை வேற்றும் அரசாக உள்ளது. அதற்கு உதாரணம் தான் இந்த கருவிழி பதிவு செய்யும் கருவி வழங்கும் நிகழ்ச்சி. காரணம் உழைக்கும் தொழிலாளர்களுக்கு விரல் ரேகை அழிந்துவிடும். சரிவர ரேகையை பதிவு செய்ய முடியாது. அவர்களும் ரேசன் பொருட்களை தங்கு தடையின்றி வாங்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு தமிழக முதல்வர் கொண்டு வந்த இந்த திட்டம் ஏழைய எளிய மக்களுக்கும் ரேசன் பொருட்களை கிடைக்க செய்யும் என்றார்.

தமிழகத்தில் தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி ஊரக வளர்ச்சித் துறை மூலம் 10ஆயிரம் கிலோ மீட்டர்களுக்கு கிராமப்புற சாலைகள் போட திட்டமிட்டு 8ஆயிரம் கிலோ மீட்டர் வரை சாலைகள் போடப்பட்டு பூர்த்தி அடைந்துள்ளது. காரணம் கிராமப்புற சாலைகளை மேம்படுத்தினால் கிராமங்கள் நகரங்களுக்கு இணையாக வளர்ச்சி அடையும் என்று திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் திட்டமிட்டதால் இன்று இந்த சாலைப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. விரைவில் தமிழகம் முழுவதும் கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஒரு லட்சம் வீடுகள் இந்த வருடத்திற்கான இலக்காக இருந்தாலும் எவ்வளவு பேருக்கு விரைவாக வீடுகள் கட்டிக் கொடுக்க முடியுமோ அதன்படி எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் பயனாளிகளுக்கு விரைவில் கட்டிக் கொடுக்கப்படும் என்றார்.

மாதந்தோறும் மக்களை சந்தித்து அவர்களுடைய குறைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய திட்டமிட்டுள்ளோம். இடைத் தேர்தல் முடிந்த பின்பு அனைத்து பகுதிகளுக்கும் சென்று பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்று அவற்றை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

அப்போது அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

நிகழ்ச்சியில் துணைப் பதிவாளர் பொது விநியோகத்திட்டம் இரா.அன்புக்கரசன், பறக்கும்படை தாசில்தார் அபுரிஸ்வான், கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் செல்வக்குமார், கூட்டுறவு சார்பதிவாளர் அன்பரசு, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், தாடிக்கொம்பு பேரூராட்சி எழுத்தர் மகாலிங்கம், மீனவரணி அமைப்பாளர் தாடிக்கொம்பு முருகேசன், தாடிக்கொம்பு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் ரமேஷ், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் இளைஞரணியினர், சார்பு அணியினர் பலர் கலந்து கொண்டனர்.

சோ.துரைபாண்டியன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

கோவை 35வது வட்டத்தில் கலைஞர் 101வது பிறந்த நாள் விழா!

சுப்பிரமணியன் தலைமை! கா.பொன்னரசு - மைக்கேல் பங்கேற்பு!

கோவை, ஜூன் 14- முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 101 வது பிறந்தநாள் விழா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் 40க்கு 40 வெற்றி வாகை சூடியதால் வெற்றி விழா, அனைத்து நாடாளுமன்றத் தொகுதிகளிலும், அயராது வலம் வந்து கழக வெற்றி கொடி நாட்டிய , முதலமைச்சர், கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அயராத உழைப்புக்கு கிடைத்த வெற்றி, பொதுமக்களின் ஒத்துழைப்பு, ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து விழாவாக, 12.6.2024 காலை 9 மணிக்கு அறிஞர் அண்ணா நகர் காவல் செக் போஸ்ட் அருகில், 35வது வட்டக் கழகத்தின் சார்பிலும், அறிஞர் அண்ணா நகர் நல சங்கத்தின் சார்பிலும், பொது மக்கள், பெருந்திரளாக கலந்து கொள்ள சிறப்புற நடைபெற்றது. பட்டாசுகள் வெடித்து சாலையோரம் சென்ற, பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், நமது உடன் பிறப்புகள் உற்சாகமாக கொண்டாடினர்.

இந்நிகழ்வில் நமது கழக கண்மணிகளும் தோழமைக் கட்சியினரும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வினை 35 வது வட்டக் கழக அவைத் தலைவர் சோ. துரை பாண்டியன் ஏற்பாட்டில், 16 ஆவது வட்டக் கழக சுப்பிரமணியன் தலைமையில், மூத்த முன்னோடியும் விண்ணதிர முழக்கங்கள் எழுப்பி விழாவினை சிறப்பித்தனர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில், நேற்று முன்தினம் (12.6.2024) குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தையொட்டி சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் தமிழ்நாட்டை குழந்தைத் தொழிலாளர் முறை அற்ற மாநிலமாக மாற்றிட அனைத்து அலுவலர்களும் உறுதி ஏற்றனர். இந்நிகழ்வில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத் தலைவர் டாக்டர்.க.மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதுரை மாநகராட்சி
மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.77/2024

மதுரை மாநகராட்சி கீழே குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஆணையாளர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

பணியின் பெயர்	ஒப்பந்தபுள்ளிகள் சமர்ப்பிக்கும் நாள்	ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும் நாள்
EI/Est.002090/23/UGSS/Package 1/23-24 (2nd call) மதுரை மாநகராட்சி AMRUT 2.0 திட்டம் வைகை வடகரை பகுதியில் புதிதாக மற்றும் விடுபட்ட இடங்களில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் (Tender Put Value : Rs.163.76/- Crore)	14.06.2024 to 31.07.2024 3.30 pm	31.07.2024 4.00 pm
EI/Est.002090/23/UGSS/Package 2/23-24(2nd call) மதுரை மாநகராட்சி AMRUT 2.0 திட்டம் வைகை தென்கரை பகுதியில் புதிதாக மற்றும் விடுபட்ட இடங்களில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல் (Tender Put Value : Rs.269.46/- Crore)		

Pre - bid Meeting Date and Time : 03.07.2024, 11.00 A.M

இதர விபரங்களை http://www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.
Contact No : 0452-2540333

ஆணையாளர்
மதுரை மாநகராட்சி

செ.ம.தொ.இ / 1885 / ஒப்பந்தப்புள்ளி / 2024

பெருநகர சென்னை மாநகராட்சி
மின்துறை

த.தொ.நு.மை.ந.க.எண்.சி1 /4590/2024

மின் ஒப்பந்தப்புள்ளிகள்

கீழ்கண்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் மேற்பார்வை பொறியாளர், மின்துறை பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களால் கோரப்படுகிறது.

Installation and Monitoring with maintenance of 289 Nos. of on-line vehicle tracking system using GPS / GIS units for conservancy vehicles on hire basis for a period of 3 years - க்கான ஒப்பம்.

பணியின் மதிப்புத் தொகை 1,31,29,224/- | ஒப்ப முன் வைப்புத் தொகை 1,31,292/-

ஒப்ப படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யலாம். நிறைவு செய்யப்பட்ட ஒப்பப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் 09.07.2024 அன்று பிற்பகல் 3.00 மணி. ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 10.07.2024 அன்று பிற்பகல் 3.15 மணி
முன் விளக்கக் கூட்ட நாள் 24.06.2024 பிற்பகல் 4.00 மணிக்கு. IT Cell, 3rd floor, Muthamizh Arignar Kalaignar Mu.Karunanidhi Maalaigai. Greater Chennai Corporation, Chennai - 600 003.

செ.ம.தொ.இ / 1888 / ஒப்பந்தப்புள்ளி / 2024

கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்

தமிழ்நாடு அரசு
பேரூராட்சிகள் துறை. குரும்பலூர் பேரூராட்சி - பெரம்பலூர் மாவட்டம்

ந.க.எண். 123 / 2024 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள். 06.06.2024

குரும்பலூர் பேரூராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0, திரவக்கழிவு மேலாண்மை திட்டம் 2023-2024-ன்கீழ், பின்வரும் விவரப்படியான STP கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து (இரு உறை) மின்னனு ஒப்பந்தப்புள்ளி முறையில் வரவேற்கப்படுகிறது. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 24.06.2024 தேதிகள்கீழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு வருகைபுரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில்	வைப்புத் தொகை ரூ	வேலை முடிக்க வேண்டிய காலம்
1	2	3	4	5
1	குரும்பலூர் பேரூராட்சி புல எண். 158/3-ல் 1.0 MLD கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைத்தல்	385.00	3,85,000	12 மாதங்கள்

• ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 24.06.2024 பிற்பகல் 3.00 மணி வரை http://tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
• கலம் எண். 4-ல் குறிப்பிட்டுள்ள டேவணித் தொகை 24.06.2024 தேதிகள்கீழமை பிற்பகல் 3.00 மணிக்குள் இணையதளம் மூலமாக செலுத்தப்பட வேண்டும்.
• இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்

தலைவர், குரும்பலூர் பேரூராட்சி. பெரம்பலூர் மாவட்டம்
செ.ம.தொ.இ / 1854/ ஒப்பந்தப்புள்ளி /2024
செயல் அலுவலர், குரும்பலூர் பேரூராட்சி. பெரம்பலூர் மாவட்டம்